# நெய்தல் நிலமக்களின் ஆடைகளும் அணிகலன்களும்

# Various types of clothes and Ornaments of the people of the neythal Land

**முனைவர்.தி.தர்மலிங்கம்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்கால்.

**Dr. T. Tharmalingam,** Assistant Professor in Tamil, Arignar Anna Govt. Arts and Science College, Karaikal-609605.

ORCID ID: https://orcid.org/0009-0009-8277-3544

**DOI : 10.5281/zenodo.10005039**

## Abstract

People living in ancient times wore clothes for concealment and beauty. They also wore ornaments to beautify themselves. The Kurinji people were the first to make and wear ornaments. They were followed by Marutham, Mullai and Neithal Nilams. Primitive people used leaves as clothing. Later on, clothes were woven and worn from silk, cotton, rat hair etc. The beauty, quality and length of the dress varies depending on the wearer. The clothes were bought and worn according to the desire and comfort of the people in the price, size, length, width and required size. The culture and customs also change in the clothes and ornaments they wear. Women played ball in white sarees. Red colored flower-worked fine sarees similar to checker van are sold in Madurai city. They bought and wore the woven cloth at the price and size according to their convenience. They called them various types of clothes. That name is thuni, thunthu, aruvai, thukil. . The flowers and leaves of various trees available in Neythal land like Punnai, Thala, Adumbamalar, Neythal flower etc. were dressed as clothes. Also weaving is a maritime land. Neythal land people mostly live in the coastal area. So they wore ornaments made from pearls and conch found in the sea. Due to trade communication by sea, foreign high quality goods were also imported. They used to make ornaments with gold, rubies, pearls, etc. The research paper reveals information's about the clothing and ornaments or jewelleries worn by the neythal land peoples.

## ஆய்வுச்சுருக்கம்:

பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் அற்றம் மறைப்பதற்காகவும், அழகுக்காகவும் ஆடைகளை அணிந்தனர். தங்களை மேலும் அழகுபடுத்திக் கொள்ள அணிகலன்களையும் அணிந்து கொண்டனர். குறிஞ்சி நிலமக்கள் முதன் முதலில் அணிகலன்களை உருவாக்கி அணிந்தனர். அவர்களைத் தொடர்ந்து மருதம், முல்லை, நெய்தல் நிலமக்களும்

அணிகலன்களை அணிந்து கொண்டனர். ஆதிகால மக்கள் இலை, தழையை ஆடையாக உடுத்தினர். பின்னாளில் பட்டு, பருத்தி, நார், எலிமயிர் முதலியவற்றினால் ஆடைகள் நெய்து அணிந்தனர். ஆடையின் அழகு, தரம், நீளம் என்பவை அதனை உடுப்போரைப் பொறுத்து மாறுபட்டிருக்கும். ஆடையணியும் நபர்களின் விருப்பம் மற்றும் வசதிக்கேற்ற விலையிலும், அளவிலும், நீளமாகவும், அகலமாகவும் தேவையான அளவிலும் வாங்கி அணிந்து கொண்டனர். பண்பாடு, பழக்கவழக்கங்கள் அவர்கள் அணியும் ஆடை, அணிகலன்களிலும் சிறுசிறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. வெண்ணிறப் புடவைகளை அணிந்து பெண்கள் பந்தாடினர். செக்கர் வானைப் போன்ற செவ்வண்ணமூட்டிய பூந்தொழில் செய்யப்பட்ட நுண்ணியப் புடவைகள் மதுரை நகரில் விற்கப்பட்டுள்ளன. நெய்யப்பட்ட ஆடையை அவரவர் வசதிக்கேற்ற விலையிலும், அளவிலும் வாங்கி அணிந்து கொண்டனர். அவற்றைத் துணி, துண்டு, அறுவை, துகில் என்று அழைத்தனர். நெய்தல் நிலத்தில் கிடைக்கக்கூடிய புன்னை, தாழை, அடும்பமலர், நெய்தல் மலர் போன்ற பலவகையான மரங்களின் மலர்களையும் அதன் இலைகளையும் ஆடையாக உடுத்தினர். மேலும் நெய்தல் கடல் சார்ந்த நிலம். நெய்தல் நிலமக்கள் பெரும்பாலும் கடலோரப் பகுதியில் வாழ்பவர்கள். ஆகையால் கடலில் கிடைக்கும் முத்து, சங்கு போன்றவற்றின் மூலம் செய்த அணிகலன்களையே அணிந்தனர். கடல் மூலமாக வாணிகத் தொடர்பு ஏற்பட்டதால், வேறுநாட்டு உயர்ரக ஆபரணப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. பொன், மாணிக்கம், முத்து, போன்றவற்றைக் கொண்டு அணிகலன்களைச் செய்தணிந்தனர். நெய்தல் நிலமக்கள் அணியும் ஆடைகள் மற்றும் அணிகலன்கள் குறித்த செய்திகளை ஆய்வுக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

**Keywords** :

ஆடைகள், அணிகலன்கள், வட்டுடை, தாளிதம், ஈரணி, கச்சை, குப்பாயம், கஞ்சுகம், வடகம், புட்டகம், தொடி, இழை, குடகம், செம்பொன்வளை, நவமணிவளை, சங்கவளை.

Clothes, Ornaments (jewelleries) vattudai, Dhalitam, Erani,Katchai, kuppayam, kanjukam, vadakam, puttakam, thodi, Ellai, kudakam, semponwelai, navamaniwelai, sangawelai.

**முன்னுரை**

ஒவ்வொரு நாட்டிலும் மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப தனித்தனியான நாகரிகமும், பண்பாடும் சிறந்து விளங்குகின்றன. அவை அந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாகத் திகழ்கின்றன. சங்க காலத்தில் ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியான நாகரிகம், பண்பாடும், பழக்கவழக்கங்களும் இருந்துள்ளன. ஒரு நிலத்திலுள்ள ஆணோ, பெண்ணோ அடுத்த நிலத்திலுள்ள ஆண், பெண்ணைத் திருமணம் செய்யும் போது பண்பாட்டுப் பரிமாற்றம் ஏற்பட்டது என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

பண்பாடு, பழக்கவழக்கங்களோடு அவர்கள் அணியும் ஆடை, அணிகலன்களிலும் சிறுசிறு மாற்றங்கள் ஏற்படுகின்றன எனும் கருதுகோளின் அடிப்படையில் நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் அணியும் ஆடை மற்றும் அணிகலன்கள் மற்றும் அவற்றை அணியும் முறை பற்றிய செய்திகளைத் தக்கச் சான்றுகளின் அடிப்படையில் எடுத்துக்கூறி விளக்கம் தந்து ஆராய்கிறது.

நெய்தல் திணை அன்பின் ஐந்திணைகளுள் ஒன்று. நிலத்தினை சுட்டும் தன்மையிலும், கடலும் கடல் சார்ந்த பகுதியினைக் குறிக்கும் வகையிலும் பயன்படுத்தப் பெறுகின்றது. நெய்தல் நிலம் மிகுதியான நீர்நிலைகள் கொண்ட நிலமாகும். இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கையை வாழும் மனிதர்கள் அந்நிலத்தில் உண்டு.

நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் இயற்கைப் பொருட்களையும் தமது உறவாக நினைத்து வாழும் மென்மையான பண்புடையவர்கள். **"வருணன் மேய பெருமணல் உலகமும்"** என்கிறது தொல்காப்பியம். கடலும் கடல் சார்ந்த நிலமே நெய்தல் என்பர். சேர்ப்பன், நுளைச்சி, நுளையர், பரதவர், பரத்தியர் ஆகியோர் நெய்தல் நிலத்து மக்களாவர். இவர்கள் அற்றம் மறைப்பதற்காக மட்டுமின்றி அழகுக்காகவும் ஆடை மற்றும் அணிகலன்களை அணிந்தனர்.

தமிழகத்தின் தலைசிறந்த தொழில்களில் ஆடை நெய்யும் தொழிலும் ஒன்றாகும். அக்காலத்திலேயே பட்டினாலும், பருத்தியினாலும், நாரினாலும், எலிமயிர் முதலியவற்றினாலும் ஆடைகள் நெய்தனர். பண்டைய காலத்தில் தமிழர்கள் பல்வகையான ஆடைகளை அணிந்தனர். அவை பொன்னாடை, பட்டாடை, பூவாடை, மேலாடை, படம், மெய்ப்பை, வட்டுடை, தாளிதம், ஈரணி, கச்சை, குப்பாயம், கஞ்சுகம், வடகம், புட்டகம் எனப் பலவகைப்பட்டன.

**நெய்தல் நிலமக்களின் ஆடைகள்**

சங்ககாலத்துத் தமிழர்கள் அவரவரின் தகுதிகளுக்கேற்ப ஆடையினை அணிந்து கொண்டனர். வசதி படைத்தவர்கள் உயர் இரக ஆடையினையும், வசதி சற்று குறைந்தவர்கள் அவருக்கேற்ற பருத்தி ஆடையினையும் அணிந்தனர். எவ்வகையானும் இடையில் ஓர் ஆடையினையும், அதற்கு மேலே ஒரு துண்டும் அணிந்தனர். இதனை

**"உண்பது நாழி உடுப்பது இரண்டே" (புறம் - 189)**

என்று புறநானூறு கூறுகின்றது. அதோடு, மேலாடையும், கச்சாடையும் அணிவது பற்றி மதுரைக்காஞ்சியில்,

**"திண்டேர்ப் பிரம்பில் புரளும் தானைக்**

**கச்சத் தின்க கழல்தயங்கு திருந்தடி" (மதுரைக் - 435 - 436)**

என்ற பாடல்வரிகள் எடுத்துக் கூறுகின்றது. மேலும், புதுமணத் தம்பதிகள் தம் முகத்தையும் உடலையும் புத்தாடைகளால் மூடிக்கொண்டதாகக் குறிப்புகள் உள்ளன. வெண்ணிறப் புடவைகளை அணிந்து பெண்கள் பந்தாடினர். செக்கர் வானைப் போன்ற செவ்வண்ணமூட்டிய பூந்தொழில் செய்யப்பட்ட நுண்ணியப் புடவைகள் மதுரை நகரில்

விற்கப்பட்டன. பாம்பின் சட்டைப் போன்றும், மூங்கிலின் உட்புறத்து வெண்தோல் போலவும் அமைந்த பூங்கலிங்கம் ஆடைப் பற்றியச் செய்திகள் புறநானூற்றிலும் இடம்பெற்றுள்ளது.

**"பாம்புரியன்ன வடிவின் காம்பின்**

**கழைபடு சொலியின் இழையணிவாரா**

**ஒண்பூங் கலிங்கம்"** (புறம் - 383)

என்ற பாடலடிகளின் வழி அறியலாம். பஞ்சிலிருந்து ஆடை நெய்யப்பட்டன. ஆடைகளின் நுண்மை, மென்மை காரணமாக அவ்வாடை நுண்பூங்கலிங்கம் எனப்பட்டது. பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்களில் இருந்த பூவையும், தழையையும் சேர்த்து ஆடையாக அணிந்ததைச் சங்கப் பாடல்களில் காணமுடிகின்றது. சங்ககாலச் சமுதாயத்தில் பல நிலைகள் இருந்தது போல், பல்வேறு நிலையிலிருந்த மக்கள் அணிந்திருந்த உடைகளிலும் தரங்களும், வகைகளும் பலநிலைகள் இருந்துள்ளன.

சங்ககால மக்களின் ஆடைகள் குறித்து **டாக்டர் ந. சுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிடும் போது, தழையை ஆடையாக** மக்கள் அணிந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். பின்னாளில் பருத்தி உடையை அணிந்தனர் என்கின்றார். ஆடையின் அழகு, தரம், நீளம் என்பவை அதனை உடுப்போரைப் பொறுத்து மாறுபட்டிருக்கும். ஆடையணியும் நபர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நீளமாகவும், அகலமாகவும் தேவையான அளவிற்கு நெய்து ஆடையை அணிந்து கொண்டனர்.

நெய்யப்பட்ட ஆடையை அவரவர் வசதிக்கேற்ற விலையிலும், அளவிலும் வாங்கி அணிந்து கொண்டனர். அவற்றைத் துணி, துண்டு, அறுவை, துகில் என்று அழைத்தனர். நெய்தல் நிலத்தில் கிடைக்கக்கூடிய புன்னை, தாழை, அடும்பமலர், நெய்தல் மலர் போன்ற பலவகையான மரங்களின் மலர்களையும் அதன் இலைகளையும் ஆடையாக உடுத்தினர். நல்ல ஆடையை அணிந்து கொண்டாற் போன்ற நெருங்கிய பிணிப்பு அவிழ்ந்த தாழை என்று வடம வண்ணக்கண் பேரிசாத்தனார் நற்றிணை 299 ஆம் பாடலில் கூறுகின்றார்.

வளைந்த கழியருகிலுள்ள அடும்ப மலரினைப் பறித்தும், தாழம்பூவைப் பறிக்குமாறும் இவளைத் தூக்கிப் பிடித்தும், தாழை ஆடையை தரிக்க வேண்டிய நெய்தல் தளிரையும் சூடவேண்டிய அதன் மலரையும் பறித்துக் கொடுத்தனர். இக்கருத்தை,

**"கொடுங்கழி மருங்கிள் அடும்புமலர் கொய்தும்**

**கைதை தூக்கியும் நெய்தல் குற்றும்"** (நற் - 349)

என்ற பாடலடிகளால் அறியலாம். நெய்தல் நிலத்தலைவியானவள் தாழையாடை உடுத்தியிருந்தாள். அவள் உடுத்தியிருந்த ஆடை சிதைந்து, சூடியிருந்த மாலை உடல் வெப்பத்தால் வாடியது என்று கூறும் இச்செய்திதனை

**"பைந்தழை சிதையகோதை வாட**

**நன்னர் மாலை நெருனை நின்னொடு"** (நற் - 363)

என்னும் வரிகள் எடுத்துரைக்கின்றது. நற்றிணையில்

**"ஆணில் பெண்டிர் தாளின் செய்த**

**நுணங்குநுண் பனுவல்"** (நற்-353)

எனும் பாடல்வரியில் ஆடை பற்றிய செய்திகள் காணப்படுகின்றது. நெய்தல் நிலமக்கள் அரையில் ஆடையும், அதற்கு மேலே மேலாடையும் அணிந்திருந்தனர். கடவுள் திருவுருவங்களுக்கு மிகவுயர் ரக ஆடைகள் அதாவது பீதாம்பரம் என்னும் பொன்னாடை அணிவித்து வழிபாடு செய்தனர் என்பதனை அறியலாம்.

**நெய்தல்நில மக்களின் அணிகலன்கள்**

நெய்தல் நிலமக்கள் பலவகையான அணிகலன்களை அணிந்து தங்களை ஒப்பனைச் செய்துகொண்டனர். ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்றார் போலவும், வாழ்க்கை வளத்திற்கும், வாழ்க்கை முறைக்கும் ஏற்றார் போலவும் அணிகலன்களை அணிந்தனர். நெய்தல் நிலமக்கள் பெரும்பாலும் கடலோரப் பகுதியில் வாழ்ந்தார்கள். அதனால் கடலில் கிடைக்கும் முத்து, சங்கு போன்றவற்றின் மூலம் செய்த அணிகலன்களையே அணிந்தனர்.

மேலும், கடல் மூலமாக வாணிகத் தொடர்பு ஏற்பட்டதால், வேறுநாட்டு உயர்ரகப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. பொன், மணி, மாணிக்கம் போன்றவற்றைக் கொண்டும் அணிகலன்களைச் செய்து அணிந்தனர். முத்தும் பவளமும் இரத்தின வகைகளும் இழைத்துப் பலவகையான அணிகலன்கள் செய்யப்பட்டன என்று கே. கே. பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

அவை கால்விரல், மோதிரம், பரியகம், நூபுரம், அரியகம், பாடகம், சதங்கை, குறங்கு செறி, அரையில் அணியும் முத்துவடம், முத்து மேகலை, மாணிக்கம் மற்றும் முத்துகளால் ஆன தோள் வளையல்கள், மாணிக்கமும் வயிரமும் அழுத்திய குடகம், செம்பொன்வளை, நவமணிவளை, சங்கவளை, பவழவளை, வாளை மீனைப் போன்று இயற்றப்பட்ட மாணிக்க மோதிரம் ஆகியன என்று குறிப்பிடுகின்றார். இவைதவிர மோசை, மரகதக்கடைசெறி என்ற அணிகலன்கள் பற்றிய குறிப்புகள் நற்றிணையில் காணப்படுகின்றன.

பெண்கள் தங்களின் காதுகள் தொங்கத் தொங்க அணிந்து கொள்ளும் காதணி குதம்பை என்றும், வளர்ந்த காதில் அணியும் காதணிக்குக் கடிப்பினை என்றும் கூறுவர். குழந்தைகளின் நெற்றியில் சூட்டியும், மறையும் மூவடம் கோர்த்த பெண் சங்கிலியும் பூட்டுவார்கள். கழுத்தில் ஐம்படைத் தாலியும், புலிப்படைத் தாலியும் அணிவித்தனர்.

நெய்தல்நில மக்கள் இயற்கையாக இருக்கின்ற அழகில் செயற்கையான அணிகலன்களை அணிந்து தங்களை மேலும் அழகாக ஒப்பனைச் செய்துக் கொண்டனர்.

அவர்கள் இலங்குவளை, செறிவளை, புரிவளை, எல்வளை, தொடி, சங்கு வளையல்கள், தோள்வளை, இழை மற்றும் மலர்களாலான மாலைகள், மணிகள் என பலவிதமான அணிகலன்களை அணிந்து அலங்காரம் செய்துகொண்டனர். அவர்கள் பிற்காலத்தில் பொன், வெள்ளி, மணி மற்றும் முத்து ஆகியவற்றாலான ஆபரணங்களையும் அணிந்தனர்.

நற்றிணையில் **“மெல்சிரல் மோசை போல”- (நாற்-188)** சிறந்த அணிகலன்களை அணிந்த நற்றிணைத் தலைவி தனது தோழியருடன் விளையாடினாள். தனது காந்தள் மலர் போன்ற மெல்லிய கைவிரலில் மோசை என்றழைக்கப்படும் மோதிரம் அணிந்திருந்தாள். தலைவன் அணிகலன் அணிந்ததை, வண்டுகள் ஒலிக்கின்ற மாலை அணிந்த மார்பின் கண்ணே, மின்னுதல் போன்ற வளைந்த அணிகலன்களை உடைய தலைவன் என்று உரைப்பதனால் தலைவனும் அணிகலன்களை அணிந்தான் என்பதனை அறிய முடிகிறது. மனிதர்கள் மட்டும் அல்லாமல் விலங்குகளுக்கும் அணிகலன்கள் அணிவித்து மகிழ்ந்தனர். சோழ மன்னன் பொன்னாளாகிய மணியை யானைக்கு அணிவித்தான் என்பதனை,

**“படுமணி யானைப் பசும்பூட் சோழர்**

**கொடிநுடங்கு மருங்கின் ஆர்க்காட்டு ஆங்கண்” (நற் - 227)**

என்ற அடிகள் கூறுகின்றது. நெய்தல் நிலமக்கள் நீலநிறத்தையுடைய நீலமணி எனும் ஆபரணத்தை அணிந்தனர். நெய்தல் நிலத்தில் மக்களோடு மட்டுமல்லாமல் விலங்குகளுக்கும் அணிகலன் அணிவித்தனர். இதனை ஒலிக்கின்ற மணிகளாகிய மாலையை அணிந்த செருக்கிய குதிரைகளை செலுத்திக் கொண்டு தலைவன் விரைந்து வருவான் என்று கூறப்படுவதைக் கொண்டு அறியலாம். மேலும் அணிகலன்களை மற்ற இயற்கைப் பொருட்களோடு ஒப்புமைப்படுத்திக் கூறியுள்ளனர்.

**தொடிவளைகள்**

அழகிய நீலமணியின் குவியலை விரித்துப் பரப்பியது போன்று நெய்தல் மலர்கள் காணப்பட்டன” என்று (குறுந்-161 பொ.வே.சோ.உரை) குன்றியனார் தமது பாடலில் கூறியுள்ளார். மேலும், தலைவி தன் கைகளில் வேலைப்பாடு அமைந்த ஒளிமிக்க வளையல்களை அணிந்திருந்தாள் என்பதை,

**“அமைந்து தொழில் கேட்டன்றோ இலமே முன்கை**

**வார் கோல் எல் வளை உடைய வாங்கி” (நற் - 239)**

என்னும் வரிகள் எடுத்துரைக்கின்றது. கடல் சங்கினை அரத்தால் பிளந்து, அறுத்துச் செய்யப்பட்ட அழகிய வளையல்களைத் தலைவி அணிந்தாள் என்பதனை,

**“கடற்கோடு அறுத்த அரம்போழ் அவ்வளை“ (ஐங்குறு-194)**

என்ற பாடல்வரி கூறுகின்றது. மேலம், தலைவனை பிரிந்தமையால் சந்து பொருந்திய ஒளிவீசும் அழகிய வளையல்கள் எம்கைவிட்டுக் கழன்று விழுகின்ற அவலநிலையைத் தலைவி பாணனிடம் கூறுகின்றாள்.

**“காண்மதி பாண நீத்தற்கு உரியை**

**துறைகெழு கொண்கன் பிரிந்தென**

**இறைகேழ் எல்வளை நீங்கிய நிலையே” (ஐங்குறு-140)**

தலைவனை பிரிந்தமையால் என் கைவளையல்கள் கழன்று விழுகின்றது என்பதிலிருந்து தலைவி ஒளிவீசும் அழகிய வளையல்களை அணிந்திருந்தமையை அறிய முடிகிறது.

**“யான் எவன் செய்கோ, பாண ஆனாது**

**மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்**

**புல்லென் றன என் புரிவளைத் தோளே” - (ஐங்குறு-133)**

தலைவன் பிரிந்து சென்றதால், அப்பிரிவினைப் பொருத்துக் கொள்ள இயலாத தலைவி முறுக்கு வளையல்கள் அணிந்த எமது தோள்கள் மெலிந்து பொலிவிழந்து காணப்படுகின்றது என்கிறாள். இதனடிப்படையில் தலைவி ஒளிவீசும் அழகிய முறுக்கு வளையல்களை அணிந்திருந்தாள் என்பதனை அறிய முடிகிறது. நெய்தல் நிலமகளிர் பொன்னால் ஆகிய வளையல்களை அணிந்தனர் என்றதனை,

**“பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த**

**கொக்கு உகிர் நிமிரல் மாந்தி, எல்பட” - (நற் - 258)**

என்ற பாடலடி உணர்த்துகின்றது. மேலும், தாழை மலரில் மகரந்தப் பொடிகள் சிதறிக் கிடப்பது, பலவகையான அணிகலன்களை அணிந்த மகளிரின் கைவளையல்கள் உடைந்து சிதறி கீழே விழுந்தது போலுள்ளது என வடமவண்ணக்கண் பேரிசாத்தனார் கூறுகின்றார். வளையல்கள் அணிந்த முன்னங்கைகளை உடைய தலைவி என்றும், அந்த வளையல்கள் மிகவும் ஒளியுடன் காணப்பட்டன என்றும் நற்றிணையில் (யானே – எல்வளை- யாத்த காணல்) 342 ஆம் பாடலில் கூறுகின்றது.

**நீலமணி**

நற்றிணைப் பாடலில் பெண்கள் கூந்தலை ஐந்து வகையாகப் பகுத்து, அதில் நீலமணியைச் சூடினார்கள். நெய்தல் நிலமக்கள் விலங்குகளுக்கு மட்டும் அணிகலன்களை அணிவித்ததோடு அல்லாது தலைவன் செல்லும் தேர்களுக்கும் அணிகலன்களால் ஒப்பனை செய்தனர். அவ்வாறு ஒப்பனை செய்யப்பட்ட தேரில் தலைவன் வந்த செய்தியினை,

**“பூண்மலி நெடுந்தேர் புரவிதாங்கி**

**தான் நம் அணங்குதல் அறியான்” (நற் - 245)**

எனும் பாடல் வரியில் காணமுடிகின்றது. நீலமணி போன்று புன்னையின் பூக்களில் காணப்படும் மகரந்தப் பொடிகள் பொன் போல் ஒளி வீசும் என்று கூறுகிறது. பசுமையான அணிகலன்களை அரசர்கள் அணிந்தனர். வளையல்கள் நெகிழ்ந்தன. செய்யும் தொழிலில் சிறந்து விளங்கிய பொற்கொல்லன் அணிகலன் பொறியற்றுப் போகாமல் நேர்த்தியாகச் செய்தான் என்பதனை,

**"உறுவிளைக்கு அசாவா உலைவு இல் கம்மியன்**

**பொறிஅறு பிணைக்கூட்டும் துறைமணல் கொண்டு**

**……………………………………………………**

**பைந் தழை சிதைய, கோதை வாட,**

**நன்னர் மாலை, பொருநை, நின்னோடு**

**சில விளங்கு எல் வளை ஞெகிழ,**

**அலவன் ஆட்டுவோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே " ( நற் - 363)**

என்ற வரிகளை நோக்குவோமாயின் நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்களிடம் பல்வேறு வகைகளில் அணிகலன்கள் வழக்கத்தில் இருந்துள்ளதைக் காணமுடிகின்றது. நெய்தல் நில தலைவி உடுத்திருந்த பசிய தழை ஆடை சிதைய, மலர்மாலை வாடியது. தலைவன் பிரிவால் ஒளி பொருந்திய வளையல்கள் கழன்று விழந்தன. நேற்று மாலைப் பொழுது தலைவனோடு அலவனைப் பிடித்து விளையாடிய பொழுது தலைவியின் காற்சிலம்பு உடைந்துவிட்டது. இப்பாடலில் தலைவி தழை ஆடை, மாலை, வளையல்கள், காற்சிலம்பு முதலிய அணிகலன்களை அணிந்திருந்தமையை அறியமுடிகிறது.

பெண்கள் கையில் அணியும் ஒருவகை அணிகலன் தொடி. நெய்தல் நில மகளிர் அழகியத்தொடி எனும் அணிகலன்களை அணிந்து, தன்னை மேலும் அழகுபடுத்திக் கொண்டனர். நெய்தல் திணையில் உண்தொடி, ஆய்தொடி, சூதார்குறுந்தொடி என்னும் தொடி வகைகள் கூறப்பட்டுள்ளன.

**"கடற் கோடு அறுத்த, அரம் போழ் அவ்வளை**

**ஒள்தொடி மடவரல் கண்டிகும் கொண்க" - (ஐங்குறு-194)**

**ஆய்தொடி மடவரல் வேண்டுதி ஆயின் (ஐங்குறு-196)**

**பொன் தொடிக்கு இறத்தல் இல்லை**

**புலம்புகொண்டு அழேற்க என்றான் –(சீவக சிந்தா-1285)**

**கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும்**

**ஐம்புலனும் ஒண்டொடி கண்ணெ உள (குறள்-1101)**

என்ற பாடலடியில் மடப்பம் பொருந்திய தலைவி அழகிய ஒளிவீசும் தொடியினை அல்லது வளையலினை அணிந்திருந்தாள் என்பதனை அறியலாம். தலைவிக்கு நிகராக பரத்தையர்களும்,

**"சூதுஆர் குறுந்தொடிச் சூர்அமை நுடக்கத்து**

**நின்வெங் காதலி தழீஇ நெருநை" - (ஐங்குறு-71)**

சூதார் குறுந்தொடி எனும் ஒளிவீசும் அழகான தொடியை அணிந்து தன்னை அழகுபடுத்திக் கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

**இழை**

இழை என்பது மகளிர் கழுத்தில் அணியும் அணிகலன்களில் ஒன்றாகும். நுண்ணிய வேலைப்பாடமைந்த இழையானது ஒள்ளிழை என்றும், நுண்ணிழை என்றும் இரண்டு வகைப்படும். நுண்ணிழையை ஐங்குறுநூறு தலைவி அணிந்தாள் என்பதனை,

**"...................நின்கேள்**

**ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென**

**வெள்ளாங் குருகை வினவு வோளே" - (ஐங்குறு-122)**

இப்பாடலில் தனது ஒள்ளிய இழையானது இங்குள்ள மணல் மேட்டில் வீழ்ந்தது என்று மிகவும் வருந்தியவளாக, அருகே காணப்பட்ட வெள்ளங்குருவியைப் பார்த்து அதை நீ கண்டாயே? என்று தலைவி வினவுகின்றாள். இதிலிருந்து நெய்தல் நிலத்தலைவி ஒள்ளிழையை அணிந்தாள் என்பதனை அறியலாம்.

**"மணங்கமழ் பொழிற்குறி நல்கினன் நுணங்கிழை" - (ஐங்குறு-174)**

இப்பாடலிலும் நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்டு செய்;த நுண்ணிழையை நெய்தல் நிலத்தலைவி அணிந்துள்ளாள் என்பதனை அறியலாம்.

**மலர் மாலைகள்**

அக்காலத்தில் பெண்கள் கடலில் நீராடும் பொழுது தங்களுடைய கழுத்தில் மலர்களால் தொடுக்கப்பட்ட மலர் மாலைகளைக் கழுத்தில் அணிந்து கொண்டு நீராடுவர். இங்குள்ள நெய்தல் நிலத்தலைவி முண்டகப்பூ மாலையைக் கழுத்தில் அணிந்து நீராடுவது நெய்தல் நிலமகளிர் இயல்பாகும். இதனை,

**"முண்டகக் கோதை நனையத்**

**தோண்டிரைப் பௌவம் பாய்ந்துநின் றோளே" (ஐங்கு-121)**

**"தும்பை மாலை இளமலை**

**நுண்பூண் ஆகம்விலங்கு வோளே" (ஐங்குறு-121)**

மேற்கூறிய பாடலடிகளின் மூலம் மாலை அணிந்து கொண்டு கடலில் நீராடும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததை அறியமுடிகிறது. மேலும் தலைவி தும்பைப்பூ மாலையை அணிந்திருந்தாள் என்பதனை அறியலாம். மகளிர் மட்டுமல்லாது நெய்தல் நிலத்திலுள்ள ஆடவர்களும் மலர்மாலைகளை அணிந்தனர். "துண்தார் அகலம் தலைத்தலைக் கொளவே" (ஐங்குறு-33) என்பதில் நெய்தல் நிலத்தலைவன் தார் எனும் மாலையை அணிகலனாக அணிந்துள்ளான் என்பதை அறியலாம்.

**"நெய்தல் நறுமலர் செருத்தியோடு விரைஇக்**

**கைபுனை நறுந்தார் கமழும் மார்பன்" - (ஐங்குறு-182).**

என்ற பாடலின் வாயிலாக நெய்தல் நிலத்தலைவன் நீலப்பூவினையும், செருத்தியின் பொன்னிறப் பூவினையும் கலந்து கட்டிய கதம்ப மலர் மாலையை மார்பிலே அணிந்தான் என்றும், பலவகையான மலர்கள் தொடுக்கப்பட்ட மாலையை நெய்தல் நிலத்திலுள்ள ஆடவர்கள் அணிந்தனர் என்ற செய்தியையும் அறியமுடிகின்றது.

**முடிவுரை**

மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான ஆடையை, அக்காலத்தில் பல்வேறு விதமாக உடுத்தியுள்ளனர். குறிப்பாக பருத்தி ஆடை என்பது அனைவரும் விரும்பி அணியும்படியாக இருந்துள்ளது. அதனோடு, பொன், மாணிக்கம், முத்து, சங்கு போன்றவற்றால் அணிகலன் செய்தும் காது, மூக்கு, கழுத்துகளில், கை மற்றும் கால்களில் அணிந்துள்ளனர். அதிலும் பல வண்ண மயமான அணிகலன்களும் மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பெற்ற ஆபரணங்களையும் நெய்தல் நிலமக்கள் அணிந்தனர். நெய்தல் நிலத்தில் வாழும் ஆண் பெண் இருபாலரும் பலவிதமான ஆடைகளையும், தொடிகள், (வளையல்கள்) இழைகள், மோதிரங்கள், மணிகள், மலர்மாலைகள் என்று பலவிதமான அணிகலன்களையும் அணிந்து தங்களை மேலும் அழகுபடுத்திக் கொண்டனர் என்பதனை இக்கட்டுரையின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

1. நற்றிணை மூலமும் உரையும் – துரைசாமிப்பிள்ளை. ஔவை சு. தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை. 2008
2. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் - டாக்டர் கே. கே. பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.சென்னை. 2009.
3. ஐங்குநுறூறு மூலமும் உரையும் – துரைசாமிப்பிள்ளை. ஔவை சு. தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை. 2008
4. புறநானூறு மூலமும் உரையும் – துரைசாமிப்பிள்ளை. ஔவை சு. தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை. 2008

5. சங்ககால வாழ்வியல் – சுப்பிரமணியன். டாக்டர் ந. நியுநேஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2010
6. மதுரைக்காஞ்சி – சாமிநாதையர். உ.வே. - தமிழ் இணையக்கல்வி கழகம், சென்னை-1986.
7. திருக்குறள்-பரிமேலழகர் உரை-தமிழ் இணையக்கல்வி கழகம்,சென்னை.1950.
8. சிவக சிந்தாமணி – சோமசுந்தரனார். பொ.வே - தமிழ் இணையக்கல்வி கழகம், சென்னை. 1958
9. குறுந்தொகை – சாமிநாதையர், உ.வே. - தமிழ் இணையக்கல்வி கழகம்,சென்னை. 1955.


## References


1. Narrinai - Auwai Su. Duraisamipillai – Tamilman Pathippagam, Chennai. 2008.
2. Tamilaka varalarum makkalum panpattum - Dr. K.K.Pillai -International institute of Tamil studies, Chennai - 2009.
3. Ainkunururu - Auwai Su. Duraisamipillai – Tamilman Pathippagam, Chennai- 2008.
4. Purananuru - Auwai Su. Duraisamipillai – Tamilman Pathippagam, Chennai-2008.
5. Sangakkala vaalviyal- Dr. N. Subramanian – New Century Book House, Chennai-2010.
6. Maduraikkanchi - . U.Ve. Saminathayar – Tamil Virtual Academy, Chennai. -1986.
7. Thirukkural - Parimelazakar urai - Tamil Virtual Academy, Chennai-1950
8. Sivakachinthamani - Po.ve. Somasundharanar - Tamil Virtual Academy, Chennai - 1958.
9. Kurunthogai - U.Ve. Saminathayart - Tamil Virtual Academy, Chennai - 1955.


### தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

**தர்மலிங்கம்.தி “நெய்தல் நிலமக்களின் ஆடைகளும் அணிகலன்களும்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 4, அக்டோபர் 2023, பக். 47-57

### Cite this Article in English

**Tharmalingam.T “Various types of clothes and Ornaments of the people of the neythal Land”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 4, October 2023, pp. 47-57